இந்தியாவை விமர்சிக்கும் அமெரிக்க அதிபர்

ட்ரம்ப்க்கு பதிலடி தராமல் மோடி மவுனம்காப்பது ஏன்?

காங்கிரஸ் கட்சித் தலைவர் கார்கே கேள்வி!



புதுடெல்லி, ஏப். 27-

இந்தியாவை விமர்சித்த அமெரிக்க அதிபர் ட்ரம்ப்க்கு பதிலடி கொடுக்காமல் பிரதமர் மோடி தொடர்ந்து மவுனம் சாதிப்பது ஏன்? என காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்தியாவையும், சீனாவையும் நரகக் குழிகள் என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அண்மையில் கடுமையாக விமர்சித்தார். இதனை சுட்டிக்காட்டி காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில், மோடியின் நெருங்கிய நண்பரான "நமஸ்தே டிரம்ப்", இந்தியாவை இழிவுபடுத்தும் வகையிலும், மிகவும் தரக் குறைவான ஒரு சொல்லைப் பயன்படுத்தியிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய அபத்தமான பேச்சுகள் குறித்து மோடி முற்றிலும் மௌனம் சாதிப்பது ஏன்?, எதைக் கண்டு அஞ்சுகிறீர்கள் என்றும் கார்கே கேள்வி எழுப்பியுள்ளார். இந்தியாஅமெரிக்கா இடையிலான ஒருதலைப்பட்சமான வர்த்தக ஒப்பந்த வரைவு, 'ஆபரேஷன் சிந்தூர்' சமயத்தில், இந்தியா பாகிஸ்தான் போரை நிறுத்தத் தான் மத்தியஸ்தம் செய்ததாக டிரம்ப் கூறியது. "BRICS அமைப்பு செத்துவிட்டது என டிரம்ப் கூறிய போது என ஒவ்வொரு பிரச்சினையிலும் இந்தியாவின் நலன்களை மோடி அடகு வைத்து விட்டதாகவும் மல்லிகார்ஜுன கார்கே குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதனிடையே, இந்தியா குறித்த அமெரிக்க அதிபர் டிரம்பின் பேச்சு, பொருத்தமற்ற, தரம் தாழ்ந்த ஒன்று என இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது. இது குறித்து டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத் துறை அதிகாரி ரண்தீர் ஜெய்ஸ்வால், அமெரிக்க அதிபரின் பேச்சு இந்தியாஅமெரிக்க உறவின் எதார்த்த நிலைகளை பிரதிபலிக்கவில்லை என்றும் கூறினார்.

ஆனால், அமெரிக்க அதிபர் டிரம்பின் பேச்சுக்கு பிரதமர் மோடியும், வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரும் அதுவரை கண்டனம் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவில் துப்பாக்கி சூடு - அதிபர் டிரம்ப் உயிர் தப்பினார்!

வாஷிங்டன், ஏப். 27-

அமெரிக்காவின் வாஷிங்டனில் உள்ள வாஷிங்டன் ஹில்டன் ஓட்டலில் 25ஆம் தேதி நள்ளிரவில் வெள்ளை மாளிகை பத்திரிகையாளர்கள் சங்கத்தின் இரவு விருந்து நிகழ்ச்சி நடைபெற்றது. அப்போது திடீரென அங்கு துப்பாக்கிசூடு நடத்தப்பட்டது. இதனால் உடனடியாக அங்கிருந்து அதிபர் டிரம்ப் மற்றும் அவரது மனைவி மெலானியா டிரம்ப் ஆகியோர் வெளியேற்றப்பட்டனர்.

வருடாந்திர ஊடக நிகழ்வுக்கு முன்னதாக, டிரம்பும், மெலானியாவும் அமர்ந்திருந்த ஓட்டல் விருந்தினர் மாளிகைக்கு வெளியே துப்பாக்கிசூடு சத்தம் கேட்டதைத் தொடர்ந்து, அங்கு பதற்றமான சூழல் நிலவியது.

இந்த சம்பவத்திற்குப் பிறகு, அமெரிக்க அதிபர் டிரம்ப் அமெரிக்காவின் ரகசிய சேவை மற்றும் உள்ளூர் பாதுகாப்பு அதிகாரிகளை பாராட்டினார். இது தொடர்பாக அவர் தனது ட்ரூத் சோஷியல் தளத்தில் வெளியிட்ட ஒரு பதிவில், "துப்பாக்கிசூடு நடத்தியவர். கைது செய்யப்பட்டுள்ளார், மேலும் 'நிகழ்ச்சியைத் தொடரலாம்' என்று நான் பரிந்துரைத்துள்ளேன், ஆனால் அது முற்றிலும் பாதுகாப்பு துறை அதிகாரிகளின் வழிகாட்டுதலின்படியே நடக்கும், அவர்கள் விரைவில் ஒரு முடிவை எடுப்பார்கள். அந்த முடிவை பொருட்படுத்தாமல், இந்த மாலை பொழுது திட்டமிட்டதை விட மிகவும் வித்தியாசமாக இருக்கும், மேலும் நாம் இதை மீண்டும் செய்ய வேண்டியிருக்கும்" என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக துப்பாக்கி சத்தம் கேட்ட பிறகு, "கீழே படுங்கள்!" மற்றும் "கீழேயே இருங்கள்!" என்று மக்கள் கத்த, சம்பவ இடத்திலிருந்து எடுக்கப்பட்ட காணொளி காட்சிகளில் டிரம்பும் பங்கேற்பாளர்களும் தங்கள் மேசைக்கு பின்னால் பதுங்கி கொண்டனர்.

பின்னர், ரகசிய சேவை முகவர்களால் டிரம்ப் சம்பவ இடத்திலிருந்து அவசரமாக அழைத்து செல்லப்பட்டார், அதை தொடர்ந்து கனரக ஆயுதம் ஏந்திய பாதுகாப்பு போலீசார் மேஜையை சூழ்ந்து கொண்டனர். பின்னர் வெள்ளை மாளிகை செய்தியாளர் சங்கத்தின் தலைவரான வெய்ஜியா ஜியாங், நிகழ்ச்சி மீண்டும் தொடங்கும் என்றும், கூடுதல் விவரங்கள் விரைவில் வழங்கப்படும் என்றும் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்த சம்பவத்தின் போது உடனடியாக யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்று தகவல் வெளியாகி உள்ளது. இதன்படி ஜனாதிபதி டிரம்ப் மற்றும் துணை ஜனாதிபதி ஜே.டி. வான்ஸ் ஆகிய இருவருக்கும் காயம் ஏற்படவில்லை என்று அசோசியேட்டட் பிரஸ் வட்டாரம் தெரிவித்தது. வெள்ளை மாளிகை செய்தியாளர்களின் இரவு விருந்தின்போது நடந்ததாக கூறப்படும் துப்பாக்கிசூடு சம்பவம் தொடர்பாக, சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டதாக ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவுடன் போர் நிறுத்தம்!

ஈரான் குழு விரைவில் பாகிஸ்தான் பயணம்!

பேச்சுவார்த்தை மீண்டும் துவங்கும் என எதிர்பார்ப்பு!

இஸ்லாமாபாத், ஏப்.27-

அமெரிக்காவுடன் போர் நிறுத்தம் குறித்து பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் இஷாக் தாருடன், ஈரானிய வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்ஸி நேற்று தொலைபேசியில் பேசினார். அமெரிக்கா-ஈரான் இடையே கடந்த 8ம் தேதி 2வார கால தற்காலிக போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. இதை தொடர்ந்து அமெரிக்கா, ஈரான் இடையே 11ம் தேதி போர் நிறுத்தம் தொடர்பாக இஸ்லாமாபாத்தில் பேச்சுவார்த்தை நடந்தது. இதில் எந்த ஒப்பந்தமும் ஏற்படவில்லை. இதனால் முதல் சுற்று பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது.

போர் நிறுத்தம் 23ம் தேதி முடிவடைய இருந்தது. அதற்கு ஒரு நாள் முன்னதாக, ஈரானுடன் காலவரையற்ற போர் நிறுத்தத்தை அமெரிக்க அதிபர் அறிவித்தார். ஆனால் போர் நிறுத்தத்தை அறிவித்தாலும் ஈரான் துறைமுகங்கள் மீதான முற்றுகை தொடரும் என டிரம்ப் கூறினார். இதற்கு பதிலடியாக ஹார்முஸ் ஜலசந்தியில் தனது உரிமையை நிலை நாட்ட குறிப்பிட்ட சில நாடுகளின் கப்பல்களுக்கு ஈரான் அனுமதி மறுத்துள்ளது. இது பதற்றத்தை ஏற்படுத்தியதோடு, வளைகுடாவில் இருந்து கொண்டு வரப்படும் எண்ணெய், எரிவாயு விநியோகத்தை முடக்கி உள்ளது.

ஹார்முஸ் ஜலசந்தியில் அமெரிக்க கடற்படையை கொண்டு டிரம்ப் தடையை அமல்படுத்தினார். இந்த தடையை நீக்கினால் மட்டுமே 2வது கட்ட பேச்சுவார்த்தைக்கு வர முடியும் என்று ஈரான் தெரிவித்துள்ளது. இதனால் பேச்சுவார்த்தை தற்காலிகமாக தடைபட்டிருந்தது. இந்த நிலையில், ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்ஸி பாகிஸ்தான் துணை பிரதமரும் வெளியுறவு அமைச்சருமான இஷாக் தாருடன் தொலைபேசியில் பேசினார்.

ஈரான் அரசு செய்தி நிறுவனம் அராக்ஸி மற்றும் பாகிஸ்தான் ராணுவத் தலைவர் பீல்ட் மார்ஷல் ஆசிம் முனீர் இடையேயும் உரையாடல் நடைபெற்றதாக தெரிவித்தது. பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பிராந்திய நிகழ்வுகள், போர் நிறுத்தம் மற்றும் அமெரிக்க-ஈரான் உறவுகளின் பின்னணியில் இஸ்லாமாபாத் மேற்கொண்டு வரும் ராஜதந்திர முயற்சிகள் குறித்து இரு தரப்பினரும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

பிராந்திய அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை விரைவில் முன்னெடுத்துச் செல்வதற்கும், தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் தொடர்ச்சியான உரையாடல் மற்றும் ஈடுபாட்டின் முக்கியத்துவத்தை தார் வலியுறுத்தினார் என்று தெரிவித்தது. இதனிடையே ஈரான் வெளியுறவு அமைச்சர் அராக்ஸி இந்த வார இறுதியில் பாகிஸ்தானுக்கு வர உள்ளார் என்றும் அவருடன் சிறிய அளவிலான அரசு அதிகாரிகள் அடங்கிய குழுவினர் வர உள்ளனர் என்று அவர்கள் தெரிவித்தனர். இதனால் 2வது சுற்று பேச்சுவார்த்தை விரைவில் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய மாலுமிகள் கதி என்ன?

கடந்த 22ம் தேதி ஹார்முஸ் ஜலசந்தியை கடக்க முயன்ற 3 கப்பல்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தி அந்த கப்பல்களை தங்கள் கட்டுப்பாட்டில் எடுத்து கொண்டது. சிறை பிடிக்கப்பட்ட பிரான்செஸ்கா கப்பலில் இந்தியர்கள் யாரும் இல்லை. மற்ற இரண்டு கப்பல்களான எபாமினோன்டாஸ், யூபோரியா கப்பல்களில் மொத்தம் 22 இந்திய மாலுமிகள் உள்ளனர். 3 கப்பல்கள் ஹார்முஸின் கிழக்கு பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது என்றும் இந்தியர்கள் அனைவரும் பத்திரமாக உள்ளனர் என்று ஒன்றிய கப்பல் மற்றும் நீர்வழிதுறையின் இயக்குனர் மந்தீப் சிங் ரந்த்வா தெரிவித்தார்.

மேற்குவங்க பா.ஜ.க. எம்.எல்.ஏ.வை

நிதி ஆயோக் துணைத் தலைவராக நியமிக்க ஒன்றிய அரசு முடிவு!

மேற்கு வங்கத்தில் சர்ச்சை!

கொல்கத்தா, ஏப்.27-

ஒன்றிய அரசின் நிதி ஆயோக் துணைத்தலைவராக பதவி விகித்து வருபவரின் பதவிக்காலம் முடிவடைகிறது. இந்நிலையில், பா.ஜ.க. எம்.எல்.ஏ.வை நிதி ஆயோக் துணைத் தலைவராக நியமிக்க ஒன்றிய அரசு முடிவு செய்துள்ளது. தற்போது மேற்குவங்க பா.ஜ.க. எம்.எல்.ஏவாக பதவி வகித்து வரும் அசோக் குமார் லகரியை துணை தலைவராக நியமிக்க மோடி அரசு திட்டமிட்டுள்ளது.

கடந்த தேர்தலில் பாலூர்காட் தொகுதியில் பா.ஜ.க. வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்றார். ஆனால் தற்போதைய தேர்தலில் போட்டியிடவில்லை. மேற்கு வங்கத்தில் இரண்டாம் கட்ட தேர்தல் நடைபெற உள்ள நிலையில் அரசியல் லாபத்துக்காக பா.ஜ.க. இந்த நியமனத்தை நடத்த உள்ளதாகவும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. அசோக் குமார் லகிரி உத்தரப்பிரதேச மாநிலத்தை சேர்ந்தவர். பா.ஜ.க. வை சேர்ந்த கோபர்தன் தாஸ் என்ற மேற்கு வங்க நபரை நிதி ஆயோக் உறுப்பினராக நியமிக்கவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அரசியல் லாபத்துக்காக இந்த இரண்டு நியமனங்களும் நடத்தப்பட உள்ளதாக புகார் எழுந்துள்ளது.

இவர் கடந்த தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அரசியல் கட்சியை சேர்ந்தவர் எப்படி அனைத்து மாநிலங்களுக்கும் பொது நபராக செயல்படுவார் என்ற கேள்வி எழுந்துள்ளது.

தமிழ்நாட்டில் வாக்குப்பதிவு முடிந்ததைத் தொடர்ந்து

தேர்தல் நடத்தை விதிகளில் தளர்வு!

பணம் எடுத்துச் செல்ல உள்ள கட்டுப்பாடுகள் நீக்கம்!

சென்னை,ஏப்.27-

தமிழ்நாட்டில் வாக்குப்பதிவு நிறைவடைந்ததை தொடர்ந்து தேர்தல் நடத்தை விதிகளில் தளர்வு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, பணம் எடுத்துச் செல்வதற்கான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டது. தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 234 சட்டப்பேரவை தொகுதிக்குமான தேர்தல் 23.04.2026 அன்று ஒரே கட்டமாக நடந்து முடிந்தது. காலை 7 மணியில் இருந்தே வாக்காளர்கள் வருகை அதிகரித்து காணப்பட்டது.

இளைஞர்கள், இளம் பெண்கள் உற்சாகத்துடன் வாக்குச்சாவடிகளுக்கு வந்து வாக்களித்தனர். சட்டப்பேரவை தேர்தலில் தமிழகத்தில் 85.16 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இதற்கிடையில், தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதையடுத்து தமிழகத்தில் தேர்தல் நடத்தை விதிகள் அமல்படுத்தப்பட்டு இருந்தன. வாக்காளர்களுக்கு பணம், பரிசு பொருட்கள் வழங்குவதை தடுக்க தேர்தல் பறக்கும் படையினர், நிலையான கண்காணிப்பு குழுவினர் தமிழகம் முழுவதும் வாகன சோதனை நடத்தி தீவிரமாக கண்காணித்து வந்தனர். ரூ.50 ஆயிரத்துக்கு மேல் பணம் கொண்டு செல்வதற்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. மார்ச் 15ம் தேதி முதல் ஏப்ரல் 22ம் தேதி வரை தமிழகத்தில் பறக்கும்படையினர் நடத்திய சோதனையில் சுமார் ரூ.1,262 கோடி மதிப்புள்ள பணம், தங்கம், வெள்ளி, பரிசு பொருட்கள், போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டது. இதில் பணமாக மட்டும் ரூ.543 கோடி பறிமுதல் செய்துள்ளதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் கூறி இருந்தார்.

இந்நிலையில், தமிழ்நாட்டில் 23.04.2026 அன்று மாலை 6 மணியுடன் வாக்குப்பதிவு நிறைவடைந்ததை அடுத்து, தேர்தல் நன்னடத்தை விதிகளில் தளர்வு அளிக்கப்பட்டுள்ளது. பறக்கும் படைகள், நிலையான கண்காணிப்பு குழு திரும்பப் பெறப்பட்டன. அதே நேரம் மற்ற தேர்தல் நடத்தை விதிமுறைகள் மே 4ம் தேதி வரை நடைமுறையில் இருக்கும். அனைத்து பூத்களிலும் பதிவான வாக்கு விவரங்களை தேர்தல் பார்வையாளர்கள் நேற்று முன்தினம் சரிபார்த்தார்கள்.

இதில் குளறுபடி கண்டறியப்பட்டால் அந்த பூத்தில் மறுவாக்குப்பதிவு நடத்த தேர்தல் ஆணையத்திற்கு பரிந்துரை செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், எந்த வாக்குச்சாவடியிலும் மறு வாக்குப்பதிவுக்கு அவசியம் இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழகத்தில் மொத்தமுள்ள 62 வாக்கு எண்ணிக்கை மையங்களில் பதிவான வாக்கு இயந்திரங்கள் பலத்த பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளது. அங்கு துணை ராணுவம், போலீசார் இணைந்து 3 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

பதிவான வாக்குகள் மே 4ம் தேதி காலை 8 மணிக்கு எண்ணப்பட்டு, உடனுக்குடன் முன்னணி நில வரங்களை தெரிவிக்க தேர்தல் ஆணையம் அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

★ தமிழகத்தில் தேர்தல் தேதி மார்ச் 15ம் தேதி அறிவிக்கப்பட்டதையடுத்து, ரூ.50 ஆயிரத்துக்கு மேல் பணம் கொண்டு செல்வதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

★ மார்ச் 15ம் தேதி முதல் ஏப்ரல் 22ம் தேதி வரை தமிழகத்தில் பறக்கும்படையினர் நடத்திய சோதனையில் சுமார் ரூ.1,262 கோடி மதிப்புள்ள பணம், தங்கம், வெள்ளி, பரிசு பொருட்கள், போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

★ தமிழ்நாட்டில் 23.04.2026 அன்று மாலை 6 மணியுடன் வாக்குப்பதிவு நிறைவடைந்ததை அடுத்து, தேர்தல் நன்னடத்தை விதிகளில் தளர்வு அளிக்கப்பட்டு, பறக்கும் படைகள், நிலையான கண்காணிப்பு குழு திரும்பப் பெறப்பட்டன.

புதுவை - பெங்களூருக்கு கூடுதல் விமானச் சேவை!

மே 1ஆம் தேதி முதல் துவங்குகிறது!

புதுச்சேரி, ஏப்.27-

மே1ம் தேதி முதல் புதுவையில் இருந்து பெங்களூருக்கு கூடுதல் விமான சேவை துவங்கப்படுகிறது. புதுச்சேரி விமான நிலையத்தில் இருந்து பெங்களூர் மற்றும் ஹைதராபாத் வழியாக ராஜமுந்திரிக்கு இண்டிகோ சார்பில் தினமும் விமானம் இயக்கப்பட்டு வருகிறது. இதற்கு பொதுமக்கள், சுற்றுலா பயணிகள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. இந்நிலை யில் புதுச்சேரியில் இருந்து பெங்களூருக்கு கூடுதலாக ஒரு விமானம் வருகிற மே 1ம் தேதி முதல் இயக்கப்படவுள்ளது.

இதுதொடர்பாக புதுச்சேரி விமான நிலைய இயக்குநர் ராஜசேகர் ரெட்டி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

தற்போதுள்ள விமான சேவையுடன் கூடுதலாக புதுச்சேரியிலிருந்து பெங்களூருவை இணைக்கும் மற்றொரு விமான சேவையை மே 1ம் தேதி முதல் இண்டிகோ ஏர்லைன்ஸ் அறிமுகப் படுத்தவுள்ளது. இந்த விமான சேவையின் பயண அட்டவணை விவரம் வருமாறு: பெங்களூருவில் இருந்து தினமும் காலை 10.10 மணிக்கு புறப்படும் விமானம் காலை 11.15 மணிக்கு புதுச்சேரி வந்தடையும்.

காலை 11.35 மணிக்கு புதுவையில் இருந்து புறப்பட்டு மதியம் 12.15 மணிக்கு பெங்களூரு சென்றடையும். இந்த புதிய விமானசேவை மூலம் பிராந்திய இணைப்பை மேம்படுத்துவதிலும், புதுச்சேரிக்கும் பெங்களூருக்கும் இடையிலான விமான பயணத்திற்கு அதிகரித்து வரும் தேவையை பூர்த்தி செய்வதிலும் ஒரு முக்கிய படியாக அமைகிறது. இந்த விரிவாக்கத்தின் மூலம் பயணிகள் தங்களது வணிக மற்றும் ஓய்வு பயணங்கள் இரண்டிற்கும் அதிக நெகிழ்வுத்தன்மை, வசதி மற்றும் மேம்பட்ட விருப்ப தேர்வுகளை பெறுவார்கள்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

மே 4 இல் கத்திரி வெயில் ஆரம்பம்

சேலத்தில் 101 டிகிரியை தாண்டிய வெயில்!

வாகன போக்குவரத்து குறைந்தது!

சேலம், ஏப். 27-

அக்னி நட்சத்திரம் எனும் கத்தரி வெயில் வருகிற மே மாதம் 4 ந்தேதி தான் தொடங்குகிறது. ஆனால் அதற்கு முன்பே தற்போது அனைத்து பகுதிகளிலும் கடந்த சில வாரங்களாக கோடை காலம் தொடங்கி வெயில் சுட்டெரித்து வருகிறது. கடும் வெயில் அடித்து வருவதால் நீர்நிலை வேகமாக வறண்டு வருகின்றன. மேலும் நிலத்தடி நீர்மட்டம் வேகமாக சரிந்து வருவதால் சேலம் மாவட்டம் முழுவதும் விவசாய பணிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக மதிய வேளைகளில் அனல் காற்று வீசுவதால் ஏற்படும் புழுக்கத்தால் பொதுமக்கள் மிகுந்த அவதிக்குள்ளாகின்றனர். இதன் காரணமாக சேலம் நகரின் முக்கிய சாலைகளான ஓமலூர் மெயின் ரோடு, திருச்சி மெயின் ரோடு, சாரதா கல்லூரி ரோடு, 4 ரோடு, 5 ரோடு, புதிய பஸ் நிலையம் உள்ளிட்ட பகுதிகளில் வாகன போக்குவரத்து குறைந்த அளவிலே தான் இருந்தது. சாலைகளில் பொதுமக்கள் நடமாட்டம் குறைந்து வெறிச்சோடி காணப்பட்டது.

வேலை விஷயமாக வெளியே சென்று வீடு திரும்பும் பொதுமக்கள், முதியோர், பெண்கள் கடும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். வெயிலின் தாக்கத்தில் இருந்து தப்பிக்க மோர், கம்மங் கூழ், தர்பூசணி, இளநீர், லெமன் ஜூஸ், முலாம் பழ ஜூஸ், வெள்ளரிப்பழ ஜூஸ், . சாத்துக்குடி ஜூஸ் உள்ளிட்ட பல் வேறு வகையான ஜூஸ் வகைகளை வாங்கி அருந்தி மக்கள் தங்களின் தாகம் தீர்த்து வருகின்றனர். இதனால் பழக்கடை, ஜூஸ் கடைகளில் தினமும் கூட்டம் அலைமோதுகிறது.

சேலம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் 102.7 டிகிரி பாரன்ஹீட் வெயில் பதிவானது. நேற்று 101.5 டிகிரி பாரன்ஹீட் வெப்ப நிலை பதிவாகியுள்ளது. வரும் நாட்களில் வெப்ப நிலை மேலும் அதிகரிக்கக் கூடும் என்பதால் பொதுமக்கள் கலக்கத்தில் உள்ளனர்.

கள்ளக்குறிச்சி, ரிஷிவந்தியம், உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதியில்

தேர்தல் பணியாற்றிய கழக கூட்டணி நிர்வாகிகளுக்கு நன்றி!

மாவட்டக் கழகச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் தெரிவித்தார்!

கள்ளக்குறிச்சி,ஏப்.27-

கள்ளக்குறிச்சி, ரிஷிவந்தியம், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற தொகுதியில் தேர்தலில் பணியாற்றிய நிர்வாகிகளுக்கு தெற்கு மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

இதுகுறித்து கள்ளகுறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் கூறுகையில்:

கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தி.மு.க. சார்பில் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. உதயசூரியன் சின்னத்தில் மூன்றாவது முறையாக போட்டியிட்டார்.

உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. மணலூர்பேட்டை பேரூராட்சி, ரிஷிவந்தியம் வடக்கு, தெற்கு, கிழக்கு ஒன்றியங்கள் மற்றும் சங்கராபுரம் வடக்கு ஒன்றியம், திருக்கோவிலூர் வடக்கு, தெற்கு, மேற்கு ஒன்றியங்களில் தீவிர பிரச்சாரம் மேற்கொண்டு உதயசூரியனத்திற்கு வாக்குகள் சேகரித்தார். இந்நிலையில் ஏப்ரல் 23ஆம் தேதி வியாழக்கிழமை அன்று வாக்குப் பதிவு நடைபெற்றது.

இந்த வாக்குப்பதிவில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட எனக்கு வாக்களிக்க உழைத்த மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவருக்கும் தெற்கு மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தனது நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

இதேபோல் உளுந்தூர்பேட்டை சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்ட ஜி.ஆர்.வசந்தவேல் உதயசூரியன் சின்னத்திற்கும், கள்ளக்குறிச்சி (தனி) சட்டமன்ற தொகுதியில் வி.சி.க. சார்பில் முனைவர் கு.மாலதி பானை சின்னத்தில் போட்டியிட்டனர்.

உளுந்தூர்பேட்டை சட்ட மன்ற தொகுதி வேட்பாளர் ஜி.ஆர்.வசந்தவேலுக்கு கள்ளக்குறிச்சி (தனி) சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் முனைவர் கு.மாலதிக்கு வாக்களிக்க உழைத்த கழக நிர்வாகிகள் அனைவருக்கும், அதேபோல் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள், அனைத்து அணி அமைப்பாளர்கள், உள்ளிட்ட அனைவருக்கும் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பிலும் எனது சார்பிலும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்வதாக தெற்கு மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.